# <u>அரக்கோணம் நகராட்சி</u>
## <u>சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு</u>

**கூட்ட எண்.78** **நாள்.27.08.2021**

பொருள் சாதாரண மன்ற கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்.31.08.2021 செவ்வாய் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சாதாரண கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக,

------

அரக்கோணம் நகராட்சி 31.08.2021 செவ்வாய் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**

**பொருள் எண்.01**

நகராட்சி ஆணையாளர் (பொ) மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜூலை/2021 மாதங்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.925 நாள்.31.08.2021**

**அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண்.02**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி பராமரிப்பில் உள்ள நகராட்சி பள்ளி கட்டிடங்களான கீழ்கண்டுள்ள கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளதால் இக்கட்டிடங்கள் நகராட்சி ஆணையர் ,பொறியாளர், நகராமைப்பு ஆய்வாளர் ஆகியோருடன் சென்று நேரடையாக கள ஆய்வு மேற்கொண்ட விவரம்

1) நகராட்சி ஏ.பி,எம் சர்ச் ஆரம்பப்பள்ளி பழைய கட்டிடம் ,
2) காந்தி நகர் நகராட்சி நடுநிலைப்பள்ளி ,பழைய கட்டிடம்
3) எம்.ஏ.ஜெயின் நகராட்சி பள்ளி சத்துணவு கூடம்

ஆகிய மூன்று கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் மாணவர்களின் பாதுகாப்பு கருதி இந்த முன்று கட்டடங்களையும் இடித்து அப்புறப்படுத்தவும் அதற்கான செலவுத்தொகை ரூ.1,50,000/ ற்கும், மேற்படி செலவுத்தொகையினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.876/2021/இ1**

**தீர்மானம் எண்.926 நாள்.31.08.2021**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.03**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி பராமரிப்பில் உள்ள நகராட்சி பள்ளி கட்டிடங்கள் பழுதடைந்து அவற்றை இடித்து அப்புறப்படுத்தி அவ்விடத்தில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் சமையலறை கட்டிடங்கள் அமைக்க அந்தந்த பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளதால் இதனை ஏற்று ஆணையர் மற்றும் பொறியாளருடன் சென்று ஆய்வு செய்தப்பட்டதில் பின்வரும் பணிகளை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நகராட்சி ஏ.பி,எம் சர்ச் ஆரம்பப்பள்ளியில் கூடுதல் பள்ளி கட்டிடம் கட்டுதல் | 9.90 |
| 2 | காந்தி நகர் நடுநிலைப்பள்ளியில் கூடுதல் பள்ளி கட்டிடம் கட்டுதல் | 9.90 |
| 3 | எம்.ஏ.ஜெயின் நகராட்சி பள்ளியில் சத்துணவு கூடம் கட்டுதல் | 4.50 |

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.876/2021/இ1**

**தீர்மானம் எண்.927 நாள்.31.08.2021**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.04**

அரக்கோணம் நகராட்சியில் மொத்தம் 21 உயர் மற்றும் சிறிய மின் கோபுர விளக்குகள் 126 பிட்டிங்குகள் (21X6 பிட்டிங்குகள்) பராமரிக்கப்பட்டு வருகின்றன இதில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சீர்செய்து ஒளிருவூட்ட 70 எண்ணிக்கை அரசு அங்கீகாரம் பெற்ற அரேக்கோணம் கூட்டுறவு அங்காடியில் கொள்முதல் செய்ய தோராய செலவினம் ரூபாய் 5.00 லட்சத்திற்கு நகர மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.319/2021/இ1**

**தீர்மானம் எண்.928** **நாள்.31.08.2021**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.05**

அரக்கோணம் நகராட்சியில் சாலை பதிவேடு 2021, அம்ருட் 2.0 பல்வேறு திட்டப்பணிகளுக்கு தேவையான வரைபடங்கள், பிரேரணைகள் தயார் செய்தல், இத்திட்டப் பணிகளின் நிலைமை குறித்து அவ்வப்போது புகைப்படம் எடுத்து நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டியுள்ளது. எனவே இதற்கான தோராய மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. திட்டப்பணியின் அவசியம் கருதி மேற்படி வேலைக்கும் தொகைக்கும் நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 876/இ1/2021**

**தீர்மானம் எண்.929** **நாள்.31.08.2021**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.06**

இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் பொது மக்கள் அதிகளவில் கோவிட்-19 தடுப்பூசி போட்டுக்கொள்ளும் பொருட்டு சிறப்பு தடுப்பூசி முகாம் நடத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழகம் முழுவதும் அறிவிக்கப்பட்டது. எனவே பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி அனைத்து வார்டுகளில் சிறப்பு தடுப்பூசி முகாம் நடத்திட முகாமில் தேவைக்கேற்ப பேனர்கள் தயார் செய்திடவும் மற்றும் முகாம் நடைபெறும் விவரங்களை பொதுமக்கள் அறியும் வண்ணம் அறிவிப்பு நோட்டீஸ் ஆகியவை அச்சடிக்க உள்ளூர் மற்றும் வெளியூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | Nos | DEVAN BROTHER'S ARTS ARAKKONAM தொகை ரூ Extra GST 18 % | ILAYA DIGITAL KANCHIPURAM தொகை ரூ Extra GST 18 % | GOPI ARTS ARAKKONAM தொகை ரூ Extra GST 18 % |
|---|---|---|---|---|---|
| 1 | A4 Pamplet (single Side) Multi Colors | 1 | 3.75 | 4 | 4.25 |
| 2 | A4 Pamplet (Single Side) Single Colors | 1 | 2 | 2.5 | 2.75 |
| 3 | 10X8 Corona Camp Banners | 1 | 1100 | 1200 | 1150 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **DEVAN BROTHER'S ARTS ARAKKONAM,** அவர்களுக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும், அதற்கான தோராய செலவின தொகை ரூ.40,000/- வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.**

**2) தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அதற்கான தோராய செலவின தொகை ரூ.40,000/- வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 326/எச்1/2020)**

**தீர்மானம் எண்.930 நாள்.31.08.2021**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.07**

அரக்கோணம் நகராட்சிக்கு பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட 44 எண்ணிக்கை பேட்டரி ஆப்ரேட்டர் (BOV) வாகனங்களை ரூ.6.00 இட்சம் மதிப்பீட்டில் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள 09.09.2020 அன்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்ட ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்திற்கு 11.09.2020 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டது. தற்போது 30.09.2021 தேதியுடன் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்திற்கு பணி உத்திரவு முடிவடைவதாலும் தற்போது கொரானா தொற்று உலகம் முழுவதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாலும் இப்பொருள் குறித்து புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள இயலாத நிலையில் தற்போது புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை ஏற்கனவே பணி செய்து வரும் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்தின் மூலம் ஏற்கனவே வழங்கி வரும் அதே மதிப்பீட்டில் மேற்படி நிறுவனத்தினரின் 23.08.2021 ஆம் தேதிய சம்மத கடிதத்தின் பேரில் தொடர்ந்து 3 மாதங்கள் (01.08.2021 தேதி முதல் 31.10.2021 வரை ) பணி உத்திரவு வழங்கிடவும், அற்கான தோராய செலவினம் ரூ.6.00 லட்சத்திற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.'**

**(ந.க.எண். 826/2015/எச்1)**

**தீர்மானம் எண்.931 நாள்.31.08.2021**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.08**

இந்நகராட்சியில் பயன்படுத்தப்படும் JCB டயர்கள் தேய்ந்து போன நிலையில் உள்ளதால் புதிய டயர்களை மாற்றம் செய்து கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | டயர்எண் விவரம் | MRF VIJAYALAKSHMI AGENCIES, ARAKKONAM ஒன்றின் விலை ரூ | P.K.TYRES ARAKKONAM ஒன்றின் விலை ரூ |
|---|---|---|---|
| 1 | 900X16 JCB FRONT TYRES | 13500 | 14500 |
| 2 | 16.9 X 28 JCB BACK TYRES | 34500 | 36000 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய MRF TYRES VIJAYALAKSHMI AGENCIES, ARAKKONAM, அவர்களிடம் பொதுசுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி ரூ.48000/-க்கான காசோலை வழங்கி டயர்களை கொள்முதல் செய்து ஜே.சி.பி பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பெற்றுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : பொது சுகாதார நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 1125/எச்1/2021)**

**தீர்மானம் எண்.932** **நாள்.31.08.2021**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.09**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை குப்பை சேகரிப்பு செய்து அதனை அப்புறப்படுத்துதல், தினசரி வீடுகள் மற்றும் தெருக்களிலுள்ள மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து சேகரித்து On site Composting மற்றும் Micro Compost Centre (MCC) தொட்டிகளில் சேர்க்கும் பணிக்கும், 36 வார்டுகளிலுள்ள தெருக்களின் பின்புறத்தில் அமைந்துள்ள சந்துகளில் உள்ள குப்பைகளை மற்றும் கால்வாய்களை சுத்தம் செய்தல், தூர்வாருதல், தெருக்களை பெருக்குதல் போன்ற பணியினை மேற்கொள்ள இந்நகராட்சியில் உள்ள 116 துப்புரவு பணியாளர்களை கொண்டு முழுமையாக அப்புறப்படுத்த முடியாத காரணத்தினால் இந்நகராட்சிக்கு கூடுதலாக மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி அடிப்படையில் 195 பணியாளர்களை நியமித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் ,சென்னை, அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.30813/ J3/2018 நாள்:11.12.2018.ல் உத்தரவு வழங்கப்பட்டு ஆணையாளர், அரக்கோணம் நகராட்சி அவர்களின் பணி உத்திரவு ந.க.எண் 2835/2018/எச்1 நாள்: 30.07.2020-ல் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு 01.08.2020ம் தேதி முதல் இது நாள் வரையிலும் 195 தூய்மை பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணி தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது .இந்நிலையில் 31.07.2020 தேதியுடன் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்திற்கு பணி உத்திரவு முடிவடைவதாலும் தற்போது கொரானா தொற்று உலகம் முழுவதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாலும் நகராட்சி நிர்வாக ஆணையர் ,சென்னை, அவர்களின் நிர்வாக அனுமதி டிசம்பர் மாதத்துடன் முடிவடைவதாலும் இப்பொருள் குறித்து ஒப்பந்தப்புள்ளி நீட்டிப்பு செய்திடவும் அல்லது புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள இயலாத நிலையில் தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை ஏற்கனவே பணி செய்து வரும் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்தின் மூலம் ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வரும் அதே மதிப்பீட்டில் மேற்படி நிறுவனத்தினரின் 23.06.2021 ஆம் தேதிய சம்மத கடிதத்தின் பேரில் தொடர்ந்து 2 மாதங்கள் (01.08.2021 தேதி முதல் 30.09.2021 வரை ) பணி உத்திரவு வழங்கி மேற்படி பணியானது செயல்படுத்தப்பட்டு வருகிறது எனவே மேலும் 01.10.2021 தேதி முதல் 31.12.2021 தேதி வரை ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வரும் அதே மதிப்பீட்டில் மேற்படி நிறுவனத்தின் மூலம் மேலும் 3 மாதங்கள் பயன்படுத்தி கொள்ளவும் அற்கான தோராய செலவினம் ரூ.81.00 லட்சத்திற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.**

**(ந.க.எண். 826/2015/எச்1)**

**தீர்மானம் எண்.933** **நாள்.31.08.2021**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.10**

இந்நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல், முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு 85 DBC பணியாளர்கள் 01.04.2021 முதல் 30.06.2021 வரை பயன்படுத்தி கொள்ளவும் மற்றும் அதற்கான தோராய செலவினம் ரூ.54.00 லட்சத்திற்கும் ஏற்கனவே மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே தற்போது நகராட்சி நிதிநிலைமையை கருத்தில் கொண்டு 35 DBC பணியாளர்களை வைத்து DBC பணிகளை மேற்கொள்ள 19.05.2021 தேதிய ஆணையாளர் அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் தற்போது 35 பணியாளர்களை வைத்து 01.07.2021 முதல் 31.12.2021 வரை டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பணி தொடர்ந்து மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.22.15 லட்சத்திற்கும் மற்றும் ஏற்கனவே இந்நகராட்சியில் பணி செய்து வந்த இன்பம் மகளிர் சுய உதவிக்குழு மற்றும் இளந்தென்றல் மகளிர் சுய உதவிக்குழு ஆகிய இரண்டு மகளிர் சுய உதவிக்குழுக்களின் மூலம் 35 பணியாளர்களை பெற்று பணி செய்து கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 1245/எச்1/2019)**

**தீர்மானம் எண்.934** **நாள்.31.08.2021**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.12**

இந்நகராட்சியில் 2020–2021ன் கீழ் 19.01.2021ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2021–22 ஆம் ஆண்டிற்கு குடிநீர் பகிர்மான குழாய் உடைப்புகள் மற்றும் இதர பராமரிப்பு பணிகளை செய்தல். | 9.90 | திரு.வி.சதிஸ்குமார் | 0.45 % | திரு.எஸ்.ரமேஷ்பாபு | 1.10 % |
| 2 | அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான கைப்பம்புகள் மற்றும் சிறு மின்விசை பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்து இயக்கி தருதல் | 5.00 | திரு.வி.சதிஸ்குமார் | 0.95 % | திரு.எஸ்.ரமேஷ்பாபு | 1.47 % |

**அலுவலக குறிப்பு : வரிசை எண். 1 முதல் 2 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/இ1/2018**

**தீர்மானம் எண்.935** **நாள்.31.08.2021**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**